**மாவனல்ல பிரதேச சபையின் - 2022**

---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மாவனல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் மாவனல்ல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கைகணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு,இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில்மேலும்விபரிக்கப்பட்டுள்ளது.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில்என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் ததுவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் விளையாட்டுத்துறை அமைச்சினால் அபிவிருத்தி செய்து கைளிக்க்ப்பட்ட மாவனல்ல பொது வியைாட்டரங்கிற்காக அவ்வமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,000,000 செலவை கடக்கொடுனர்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023ஆண்டிறுதிக் கணக்கை தயாரிக்கும் போது அதனை சரிசெய்வதாக. | கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காணி பிரிப்பிற்காக மீளாய்வாண்டில் கிடைந்த 1 சதவீதமான ரூபா 4,630,530 தொகையை வைப்பாக கணக்கீடு செய்யாது, வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023ஆண்டிறுதிக் கணக்கை தயாரிக்கும் போது அதனை சரிசெய்வதாக. | - மேற்படி - |
| (இ) | 2016 ஆண்டினுள் வழக்கரிஞர் கட்டணம் செலுத்துவதற்கு இல்லாதிருக்கையில் அதற்காக ரூபா 1,773,000 ஒதுக்கப்பட்டிருந்தது. | கடிதக் கோவை பிரகாரம் கொடுப்பனவொன்று இல்லையென உறுதி செய்து கொண்ட பின்னர் 2023 ஆண்டில் தேவைான சீராக்கம் செய்வதாக. | - மேற்படி - |
| (ஈ) | 2021 ஆண்டில் பண்டகக் கணிப்பீட்டின் போது இனங்கண்ட ரூபா 190,077 ஆன பற்றாக்குறை மற்றும் ரூபா 209,795 ஆன கொடிக் கம்ப பற்றாக்குறையை பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து அறிவிடும் வரை அறவிட வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எதிர்காலத்தில் அறவிட வேண்டிய மீதியாக இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்படும். | குறித்த பற்றாக்குறையை பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 ஆண்டில் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 114,600 மற்றும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் நீதிமன்ற தண்டப்பண ஆளணி கொடுப்பனவுகளிற்காக ரூபா 222,288 கூடுதலாக ஒதுக்கப்பட்டிருந்தது. | 2023ஆண்டிறுதிக் கணக்கை தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டினுள் கிடைத்த பெறவேண்டிய முதலீட்டு வட்டி ரூபா 127,685 யை கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டிக் கணக்கை செலவு வைக்க வேண்டியதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தை வரவு வைத்து நிலையான வைப்புக் கணக்கை செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆண்டின் முதலீட்டு வட்டி கிடைக்க முன்னர் முதலீட்டிற்கு திருப்பப்பட்டிருந்ததனால் 2022 ஆண்டில் ஆரம்ப மீதியுடன் செம்மையாக்கி சரி செய்துள்ளதாக. | - மேற்படி - |
| (எ) | 2021 ஆண்டினுள் குறைவாக கணக்கீடு செய்த ரூபா 1,818,978 ஆன முதலீட்டு வட்டி வருமானம், கிடைக்க வேண்டிய வட்டி வருமானக் கணக்கை வரவு வைத்து திரண்ட நிதியத்தை செலவு வைக்க வேண்டிய போதும், திரண்ட நிதியத்திற்கு வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆணடினுள்ளேயே மாற்றப்பட்டுள்ளதால் திரண்ட நிதியத்திற்கு செம்பையாக்கியதாக. | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 19,113,662 ஆன தளவாட பொருத்து மற்றும் அலுவலக உபகரணங்களில் மற்றும் ரூபா 492,368 ஆன கிடைக்க வேண்டிய வீதவரியின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள அட்டவணைகள் சமர்பிக்கப்படவில்லை. | 2023 ஆண்டிறுதிக் கணக்குகளுடன் அந்த அட்டவணையை சமர்ப்பதாக. | அட்டவணை சமர்பிக்கப்பட வெண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | நி.பி. 371 | 02 ஆண்டிற்கும் 12 இற்கும் இடையிலான காலத்தினுள் வழங்கிய ரூபா 325,632 முற்பணம், மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571 | 03 ஆண்டுகளை விட பழமையான ரூபா 2,189,553 ஆன வைப்புக்களை தீர்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 52,521,177 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 93,316,542 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சுமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 16,302,300 | 18,766,835 | 19,000,551 | 13,646,172 | 16,176,590 | 13,181,823 | 11,900,439 | 14,009,150 |
| வாடகை | 47,390,700 | 31,264,938 | 31,733,747 | 11,163,365 | 38,110,150 | 33,994,565 | 32,114,790 | 19,189,954 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,625,250 | 3,149,849 | 2,158,269 | 4,916,278 | 4,260,300 | 4,303,669 | 2,645,739 | 3,875,698 |
| ஏனைய வருமானம் | 20,637,000 | 18,976,173 | 10,405,778 | 15,918,578 | 21,713,500 | 16,408,056 | 11,877,377 | 394,992 |
| | 90,955,250 | 72,157,795 | 63,298,345 | 45,644,393 | 80,260,540 | 67,888,113 | 58,538,345 | 37,469,794 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி, ஏக்கர் வரி, கடை வாடகை, நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் போன்ற வருமான விடயங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 120,658,749 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கு இடையிலான பழைய ரூபா 57,904,589 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 8,349,630 ஆன மீதியும் காணப்பட்டது. | இக்கூற்றுடன் இணங்குகிறேன். நிலுவை தொகையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக.. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காட்சி அறிவித்தல் பலகை 107 இலிருந்து 2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 7,453,806 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | பழைய நிலுவை அறிவித்தல் பலகை கட்டணத்தை பதிவழிக்க அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (இ) | 1988 மே 17 திகதிய இலக்கம் 1988/22 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை பிரகாரம், 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய வீதவரி மதிப்பீட்டை, 2009 ஆண்டின் பின்னர் மேற்கொண்டிருக்கவில்லை. | 2009 ஆண்டின் பின்னர் வரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹெம்மாத்தகம கட்டிடத் தொகுதிக்குரிய நிலுவை ரூபா 1,607,774 ஆன முற்செலுத்தல் (Key noney) மீதி, 2022 திசெம்பர் 31 திகதியன்று 21 ஆண்டுகள் பழமையானதாகும். | அவ்வாறான நிலுவையொன்று காணப்படுகிறது. இந்த வியாபார கட்டிடத் தொகுதியின் இரண்டாம் கட்ட நிர்மாணத்திற்காக இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | 03 ஆண்டுகளைவிட பழைய ரூபா 1,654,496 ஆன கடன்படுனர் 02 மீதிகள் அறவிடப்படவும், ரூபா 3,169,542 ஆன கடன்கொடுனர் மீதிகளை தீர்க்கவும் 2022 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக்கூற்றுடன் இணங்குவதாக. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட்டு செலுதத் வேண்டிய மீதிகளை செலுத்த வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நகரமயமான சபை அதிகார எல்லையில் மலசல கழிவகற்றல் சேவையை வினைத்திறனாக மேற்கொள்ளாததால் 2022 ஆண்டில் ஆகஸ்ட் வரை ஈட்டிய வருமானம் ரூபா 24,300 மாத்திரமானது. | மலசல கழிவை வெளியேற்ற முறைமையொன்றை தயார் செய்து கொண்ட பின்னர் மலசல கழவகற்றல் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியுமாகும். | கழிவுகளை வெளியேற்றும் இடமொன்றை தயார் செய்து கொள்ள வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் 14 இயந்திரங்கள் நீண்ட காலமாக சிறுவர் பூங்கா வளவில் துருப்பிததவன்னம் காணப்பட்டன. | பழுதடைந்த 07 வாகனங்களை பராதீனம் செய்ய இயந்திர பொறியியலாளர் தகைமை சான்றிதழ் பெற்றுக் கொள்ள கோரப்பட்டுள்ளது. | 2020 ஒக்டோபர் 02 திகதிய இலக்கம் 05/2020 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கொம்பெக்டர் இயந்திரமொன்றை வேறொரு அரச நிறுவனமொன்றுக்கு கையளிக்க மேற்கொண்ட தீர்மானம் செயற்படாமை காரணமாக, அவ் வாகனத்தை 2013 ஆண்டு முதல் பயன்பாடின்றி நிலவியது. | இது தொடர்பாக முன்நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் பயன்படுத்தப்படாது இருக்கக்கூடாது. |
| (இ) | சபைக்கு சொந்தமான 08 கடையறைகளிற்கு 2022 ஆண்டிற்காக குத்தகைதாரர்கள் முன்வராததால் ரூபா 12,818,660 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அக்கடையறைகள் அமைந்துள்ள இடம் மக்கள் நடமாட்டமற்றதால் வியாபார செயற்பாடுகளை மேற்கொள்வது நட்டமாகையால் டென்டர் விலைக்கு அவற்றை பெறுவதனை மறுத்திருந்ததாக. | சொத்துக்கள் பயன்படாது இருக்கக்கூடாதவாறு பொருத்தமான தீர்மானமொன்றிற்கு வர வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தமொன்றிற்காக முற்பணம் சேலுத்தும் போது 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.4.4 பிரிவிற்கு இணங்காது உடன்பட்ட தொகையின் 70 சதவிதம் அதாவது, ரூபா 4.893,000 முற்பணம் செலுத்திருந்தது. | இதற்காக பொது சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| வெற்றிடமற்ற துறை மற்றும் சுகாதார தொழிலாளர் பதவிகளிற்காக நேர் ஊதியம் அடிப்படையில் ஆட்சேர்பதற்கு 2006 ஆண்டின் போது சபை தீர்மானித்து அதன் பிரகாரம், 2013 ஆண்டு முதல் 31 ஊழியர்களை ஆட்சேர்த்திருந்தனர். எனினும், மேற் குறிப்பிட்ட சபை தீர்மானத்திற்கு இணங்காது,, ஏனைய பணிகளிற்கு அவர்களை ஈடுபடுத்தி 2022 ஆகஸ்ட் வரை சம்பளமாக ரூபா 57,524,942 சபை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, அவறிறின் 10 ஊழியர்களின் நியமன கடிதங்கள் தனியால் கோவையிற்கு உட்படுத்திருக்கவில்லை. | அரசியல் அதிகாரத்தினால் ஊழியர்களை ஆட்சேர்த்து ஏனைய இடங்களில் சேவையில் ஈடுபடுத்திருந்தனர். இது தொடர்பாக பொது சபைக்கு முன்வைத்த போதும் அவ் உத்தேசம் கேட்டு அகற்றப்பட்டிருந்தது. அவர்களை 5 ஆண்டுகளிற்கு அதிக காலம் சேவையின் ஈடுபடுத்தியுள்ளதால் நியமன கடிதங்கள் வழங்குவது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் விசாரித்துள்ளதாக. | சேவை தேவைபாட்டின் மீது பதவிகளின் எண்ணிக்கையை அதிகரித்திற்கொள்ள அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும. |